**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் , இராதாபுரம்.**

**முன்னிலை - திரு. V.C. குபேரசுந்தர், M.A., B.L.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், இராதாபுரம்.**

**2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 25 ஆம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 79/2019**

**CNR No. TNTL 26-000034-2019**

| | |
|---|---|
| தமிழக அரசு<br>காவல் உதவிஆய்வாளர் மூலம்,<br>கூடங்குளம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.67/2010. | ... **குற்றமுறையிட்டாளர்** |
| /எதிர் | |
| 1), முருகன், வயது 33/2010,<br>த/பெ. செல்வராஜ்,<br>அடங்கார்குளம்.<br>2), சேகர், வயது 27/2010,<br>த/பெ. செல்வராஜ்,<br>அடங்கார்குளம்.<br>3), செல்வன், வயது 25/2010,<br>த/பெ. செல்வராஜ்,<br>அடங்கார்குளம்.<br>4), குணசேகரன் (இறப்பு), வயது 42/2010,<br>த/பெ. சுப்பையா,<br>அடங்கார்குளம். | .... **குற்றஞ்சாட்டப்பட்டவர்** |

| | |
|---|---|
| 5), ஊசிக்காட்டான், வயது 52/2010,<br>த/பெ. சுப்பையா,<br>அடங்கார்குளம்.<br>6), சுடலை, வயது 57/2010,<br>த/பெ. சிவணந்தபெருமாள்,<br>அடங்கார்குளம்.<br>7), குமார், வயது 30/2010,<br>த/பெ. சுடலை,<br>அடங்கார்குளம்.<br>8), ஜெயசீலன், வயது 25/2010,<br>த/பெ. சுடலை,<br>அடங்கார்குளம்.<br>9), சிவணணைந்தன் (இறப்பு), வயது 37/2010,<br>த/பெ. புலமாடன்,<br>அடங்கார்குளம்.<br>10), மணிகண்டன் (இறப்பு), வயது 30/2010,<br>த/பெ. செல்லத்துரை,<br>சிவகாமிபுரம் பணகுடி. | |

இவ்வழக்கானது வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், C.C. No:246/2017 ஆக 15.08.2017-ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்த சூழ்நிலையில் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, திருநெல்வேலி ஆணை எண். 766/2019 தேதி 21/11/2019-ன் பிரகாரம் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 18.12.2019-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இறுதி விசாரணைக்காக

இந்நீதிமன்றம் முன்பு 24.06.2026-ம் தேதி வந்த போது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை1 அவர்களும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக வழக்கறிஞர் திரு.C.கிறிஸ்டோபர், B.A.,B.L., அவர்களும் ஆஜராகி, இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

## வழக்கின் விபரங்கள்

| வ. எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | இராதாபுரம் காவல் நிலையம் குற்றஎண். 83/2016 | |
|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப் பட்டவர்களின் விபரம் | பெயர் | முருகன் |
| | | தந்தை பெயர் | செல்வராஜ் |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | அடங்கார்குளம் |
| | | வயது | 33/2010 |
| | | பெயர் | சேகர் |
| | | தந்தை பெயர் | செல்வராஜ் |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | அடங்கார்குளம் |
| | | வயது | 27/2010 |
| | | பெயர் | செல்வன் |
| | | தந்தை பெயர் | செல்வராஜ் |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | அடங்கார்குளம் |
| | | வயது | 25/2010 |

| | | | |
|---|---|---|---|
| | | பெயர் | குணசேகரன் (இறப்பு) |
| | | தந்தை பெயர் | சுப்பையா |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | அடங்கார்குளம் |
| | | வயது | 42/2010 |
| | | பெயர் | ஊசிக்காட்டான் |
| | | தந்தை பெயர் | சுப்பையா |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | அடங்கார்குளம் |
| | | வயது | 52/2010 |
| | | பெயர் | சுடலை |
| | | தந்தை பெயர் | சிவணணைந்தபெருமாள் |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | அடங்கார்குளம் |
| | | வயது | 57/2010 |
| | | பெயர் | குமார் |
| | | தந்தை பெயர் | சுடலை |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | அடங்கார்குளம் |
| | | வயது | 30/2010 |
| | | பெயர் | ஜெயசீலன் |
| | | தந்தை பெயர் | சுடலை |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | அடங்கார்குளம் |

| | | | |
|---|---|---|---|
| | | வயது | 25/2010 |
| | | பெயர் | சிவணணைந்தபெருமாள் (இறப்பு) |
| | | தந்தை பெயர் | புலமாடன் |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | அடங்கார்குளம் |
| | | வயது | 37/2010 |
| | | பெயர் | மணிகண்டன் (இறப்பு) |
| | | தந்தை பெயர் | செல்லதுரை |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | சிவகாமிபுரம் பணகுடி |
| | | வயது | 30/2010 |
| 2 | சம்பவ தேதி | | 05.04.2010 |
| 3 | முறையீடு/குற்ற இறுதி அறிக்கை | | 18.12.2019 |
| 4 | கைது | | A1, A3, A4, A8 to A10-22.04.2010, A2, A5, A6 -09.04.2010, A7-06.04.2010, |
| 5 | பிணையில் விடுவித்ததல் | | A1, A3, A4, A8 to A10-22.04.2010, A2, A5, A6 -16.04.2010, A7-16.04.2010, |
| 6 | ஒப்படைத்தல்/அனுப்பிவைத்தல்/குற்றச்சாற்று | | 17.06.2026 |
| 7 | விசாரணைத் துவக்கம்<br>அ.சா.1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 23.06.2026 & 23.06.2026 |
| | அ.சா.2 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 23.06.2026 & 23.06.2026 |
| | அ.சா.3 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 23.06.2026 & 23.06.2026 |
| | அ.சா.4 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 23.06.2026 & 23.06.2026 |
| 8 | கு.வி.மு.ச. பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | | 24.06.2026 |

| | | |
|---|---|---|
| 9 | விசாரணை முடிவு | 24.06.2026 |
| 10 | தண்டனை அல்லது உத்தரவு | 25.06.2026 |
| 11 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு /முடிவு | 25.06.2026 |
| 12 | காலதாமதத்தின் விளக்கம் | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுத்துள்ளது. |

1) **குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**:

கடந்த 05.04.2010 ம் தேதி காலை சாட்சி-1 அவரது வீட்டு முன் காயப்போட்டிருந்த வைக்கோல் மீது 1, 2 எதிரிகளின் தாயாரான புஷ்பம் மாடுகளை மேயவிட்டு நின்றதை சாட்சி-2 சத்தம் போட்டுள்ளதாகவும், 1, 2, 3 எதிரிகள் சாட்சி-2 ஐ அசிங்கமாக பேசியதை கேள்விப்பட்ட சாட்சி-1 மாலை சுமார் 5 மணிக்கு சாட்சி-1 ன் வீட்டு பக்கம் வந்த 2 வது எதிரியிடம் கேட்டபோது 2, முதல் 6 எதிரிகள் கம்புடனும், 5, 7, 8 எதிரிகள் கல்லுடனும், 9 வது எதிரி அரிவாளுடனும் சட்டவிரோதமாக சாட்சி-1 ன் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து 1 வது எதிரி கையிலிருந்த கல்லால் சாட்சி-1 ன் முன் தலையில் அடித்து இரத்தகாயம் ஏற்படுத்தியும், 10 வது எதிரி கையிலிருந்த அரிவாளால் சாட்சி-4 ன் உச்சி தலையில் வெட்டி இரத்தகாயம் ஏற்படுத்தியும், 2 வது எதிரி கையிலிருந்த கம்பால் சாட்சி-3 ன் கையில் அடித்து வீக்க காயம் ஏற்படுத்தியும், 7 வது எதிரி கல்லால் சாட்சி-2 ன் இடது கணுக்காலில் எறிந்து வீக்க காயம் ஏற்படத்தியும், 5 வது எதிரி கல்லால் சாட்சி-2 ன் வலது கால் முட்டியில் எறிந்து காயம் ஏற்படுத்தியும், எதிரிகள் அனைவரும் சாட்சி-1 ன் தரப்பினை பார்த்து எங்க குடும்பத்தோடு மோதினால் உங்களை கூண்டோடு அழித்து விடவோம் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக இராதாபுரம் காவல் நிலைய உதவி

ஆய்வாளர் எதிரி மீத இ.த.ச. பிரிவுகள் 147, 148, 452, 324, 506(ii) r/w 4 of TNPHW Act- ன் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) <u>4, 9, 10 **எதிரிகள் காலம் சென்றுவிட்டார்கள் என்பதற்கான உத்தரவு**</u> :

(i) வழக்கின் 4 வது எதிரி குணசேகரன் கடந்த 13.08.2025 அன்று இறந்துவிட்டதாக அரசு தரப்பில் 15.06.2026 அன்று இறப்புச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலினை செய்யப்பட்டு 4 வது எதிரிக்கு எதிரான இவ்வழக்கின் குற்றச்சாட்டு நீக்கறவு செய்யப்பட்டுள்ளது.

(ii) வழக்கின் 9 வது எதிரி சிவணைணைந்தபெருமாள கடந்த 31.01.2018 அன்று இறந்துவிட்டதாக அரசு தரப்பில் 28.08.2018 அன்று இறப்புச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலினை செய்யப்பட்டு 9 வது எதிரிக்கு எதிரான இவ்வழக்கின் குற்றச்சாட்டு நீக்கறவு செய்யப்பட்டுள்ளது.

(iii) வழக்கின் 10 வது எதிரி மணிகண்டன் கடந்த 06.03.2022 அன்று இறந்துவிட்டதாக அரசு தரப்பில் 17.06.2026 அன்று இறப்புச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலினை செய்யப்பட்டு 10 வது எதிரிக்கு எதிரான இவ்வழக்கின் குற்றச்சாட்டு நீக்கறவு செய்யப்பட்டுள்ளது.

3) <u>**எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன் படி நகல் வழங்குதல்**</u> :

இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது.

4) <u>**குற்றச்சாட்டு வனைதல்**</u>

எதிரிகளுக்கு வழக்கு நகல்கள் இலவசமாக வழங்கப்பட்ட பிறகு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து எதிரிகள் மீது

இ.த.ச. பிரிவுகள் 147, 148, 452, 324, 506(ii) r/w 4 of TNPHW Act படியும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக் கூறி வினாவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தான் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டுகளை மறுத்துக் கூறினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

5) **அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:**

அ.சா.4 ஜேக்கப்ஜெபதுரை தனது சாட்சியத்தில் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 05.04.2010 ம் தேதி 21.30 மணிக்கு கூடங்குளம் சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய இருந்த போது அ.சா.1 சிவகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.2 புகார்மனுவைப் பெற்று, அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 67/2010 இதச சட்டப்பிரிவுகள் 147, 148, 452, 324, 506(ii) r/w 4 of TNPHW Act சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், விசாரணை அதிகாரி வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு 05.04.2010 ம் தேதி 22.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அண்ணாதுரை மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வைமகஜர், அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்தும், எதிரிகளை தொடர்ந்து தேடி வந்த நிலையில் 2, 5, 6, 7 எதிரிகளை காரணம் கூறி கைது செய்தும், சாட்சிகள் 1 முதல் 10 மற்றும் வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் காயம்பட்ட சாட்சிகள் சிவகுமார், ஆறுமுகம், அரிகிருஷ்ணன், கலைமகள் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் டாக்டர். தனசேகரன் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.9 காயசான்றிதழ்கள் பெற்றும், வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது 147, 148, 452, 324, 506(ii) r/w 4 of TNPHW Act -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6) **அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :**

இவ்வழக்கில் பட்டியலிடப்பட்ட சாட்சிகளில் அ.சா.1 முதல் அ.சா.3 புகார்தாரர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், ஏனைய சாட்சிய விசாரிப்பதில் நீதிமன்ற நேரம் விரையமும், மேலும் ஏனைய சாட்சிகள் விசாரிப்பதினால் வழக்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படபோவதில்லை என்பதால் அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 14 சாட்சிகளில் 10 சாட்சிகளை அரசு தரப்பு விலக்கிக் கொண்டும், விசாரணை அதிகாரியான ஜேக்குப்ஜெபதுரை அ.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) **கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படியான கேள்வி வினவுதல்:**

இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவுற்ற பிறகு மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான விபரங்கள் குறித்து எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படி எடுத்துக் கூறி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என மறுத்துள்ளதுடன் தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டு சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

8) **அரசு தரப்பு வாதம்:**

அரசு தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா.3 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 புலன் விசாரணை சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 ஆவணங்களின் மூலம் அரசு தரப்பில் மேற்படி குற்றச்சாட்டுக்களை எதிரிகளுக்கு எதிராக நிரூபித்துள்ளது என்றும் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கும் படி வாதிடப்பட்டது.

9) **எதிரிகள் தரப்பு வாதம்:**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சியங்கள் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிரி கள்

மீதான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை. அதனால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்யும் படி வாதிடப்பட்டது.

10) **குற்றச்சாட்டுகள் மீதான விவாதம்** :

எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்?

11) **தீர்வு:**

(i) அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சியங்களை ஆராய்கையில் இவ்வழக்கின் எதிரிகள் அ.சா-1 ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தும், அ.சா.1 முதல் அ.சா.3 ஐ தாக்கி சாதாரண காயம் எற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியங்கள் எதுவும் அமையவில்லை. அதாவது அ.சா.1 ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசிலினை செய்ததில்,

> "*ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் புகார்மனுவில்* ***அ.சா.ஆ 1*** *கையொப்பம் செய்தேன் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை.*" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

எனவே அ.சா.1 முதல் விசாரணையில் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டி சாட்சியம் அளிக்கவில்லை.

> அ.சா.2 ன் சாட்சியத்தில் " *அ.சா.1 தனது மகன் என்றும், இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை*" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

| |
|---|
| அ.சா.3 ன் சாட்சியத்தில் *" இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை"* என்று சாட்சியம் அளித்துள்ளார். |

(ii) எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவித்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் பொருண்மை எதுவும் அமையவில்லை. எனவே இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

(iii) இந்நிலையில்,

**1972 (4) SCC 562 SAIT TARAJEE KHIMCHAN AND OTHERS Vs YELAMARTI SATYAM ALIAS SATTEYYA AND OTHERS** இவ்வழக்கில் பாரா நம்பர் 15 ல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| ***The mere marking of an exhibit does not dispense with the proof of*** |

என்று தீர்ப்பளித்துள்ளது.

(iv) மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தினுடைய 2 நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பான **2003 (8) SCC Page No. 245, NARBADA DEVI GUPTA Vs BIRENDRA KUMAR JAISWAL AND ANOTHER** பாரா நம்பர் 16 ;

| |
|---|
| ***"The legal position is not in dispute that mere production and marking of a document as exhibit by the court cannot be held, to be a due proof of its contents"*** |

என்று கூறுகிறது. அதாவது, மேற்படி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளின்படி ஒரு ஆவணத்தை நீதிமன்றத்தில் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்ட

காரணத்தினால் மட்டுமே அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக எடுத்துக் கொள்ள முடியாது.

12) **முடிவு:**

(i) இந்நிலையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 பிறழ்சாட்சியாக மாறிவிட்ட காரணத்தினால் அ.சா.1ன் சாட்சியமானது ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளதா என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் போது, இந்நீதிமன்றமானது, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கொடுத்த முன் தீர்ப்பான ***Vadivelu Thevar vs State of TN AIR 1957 SC 614 wherein held that***

> it is a sound and well – established rule of law that the court is concerned with the quality and not with the quantity of the evidence necessary for, proving or disproving a fact. Generally speaking, oral testimony in this context may be classified into three categories, namely :
> (1) Wholly reliable
> (2) Wholly unreliable
> (3) Neither wholly reliable nor wholly unreliable
> *In case on hand falls the second category of proof, when the PW1 evidence is wholly unreliable it does not require corroboration.*

(ii) மேற்கண்ட முன் தீர்ப்பை இவ்வழக்கிற்கு பொருத்தி பார்க்கும்போது பொருந்துவதாக இந்நீதிமன்றம் கருகிறது. மேற்கண்ட முன் தீர்ப்பின் படி அ.சா.1ன் சாட்சியமே நம்பகத்தகுந்ததாகவே இல்லாத போது மற்ற அரசு தரப்பு சாட்சியங்களின் உறுதியூட்டலை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

13) **இறுதியாக,** அரசு தரப்பில் 1 முதல் 3, 5 மதல் 8 எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்பதால்

சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து இவ்வழக்கின் எதிரிகளை இ.த.ச. பிரிவுகள் 147, 148, 452, 324, 506(ii) r/w 4 of TNPHW Act-ன் படி குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் படி எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

14) **வழக்கு சொத்து மீதான உத்தரவு :**

வழக்கு சொத்துக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 25-ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.06.25 16:33:37 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர்,

இராதாபுரம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | சிவகுமார், த/பெ. ஆறுமகம் |
| அ.சா.2 | ஆறுமுகம், த/பெ. இசக்கிமுத்து |
| அ.சா.3 | கலைமகள், க/பெ. இசக்கியப்பன் |
| அ.சா.4 | ஜேக்கப்ஜெபதரை, த/பெ . ஞானமுத்து |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 05.04.2010 ம் தேதியிட்ட புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 05.04.2010 ம் தேதியிட்ட புகார்மனு |

| | |
|---|---|
| அ.சா.ஆ.3 | 05.04.2010 ம் தேதியிட்ட முதல்தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 05.04.2010 ம் தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 05.04.2010 ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 16.04.2010 ம் தேதியிட்ட சிவகுமார் என்பவரின் காயசான்றிதழ் |
| அ.சா.ஆ.7 | 05.04.2010 ம் தேதியிட்டஆறுமுகம் என்பவரின் காயசான்றிதழ் |
| அ.சா.ஆ.8 | 05.04.2010 ம் தேதியிட்ட அரிகிருஷ்ணன் என்பவரின் காயசான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | 05.04.2010 ம் தேதியிட்ட கலைமகள் என்பவரின் காயசான்றிதழ் |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்** - இல்லை

**எதிரி கள்தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்**-இல்லை

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.06.25 16:33:45 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர், இராதாபுரம்.

**குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 2. | வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார். |
| 3. | எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை |